சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

HMOP No.7/2024

பெயர். திரு. முரளிதரன் நாள் 25.07.2025
த/பெ. முனுசாமி

**<u>மனுதாரர் சா.2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>**

1) முதல் விசாரணையில் கண்டுள்ள கங்கதிகள் நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. மனுதாரரின் சகோதரர் வெங்கடேசன் என் சிறுவயது நண்பர். மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் எந்த தேதி மற்றும் கிழமையில் திருமணம் நடைபெற்றது என்ற விவரம் எனக்குத் தெரியாது. எதிர்மனுதார் திருமணத்திற்கு பிறகு எத்தனை நாட்கள் மனுதாரருடன் குடும்பம் செய்தார் என்ற விவரம் தெரியாது. மனுதாரர் வீட்டில் பிரச்சனை ஏற்பட்டதால் மனுதாரரின் அண்ணன் வெங்கடேசன் என்னை அழைத்ததன் பேரில் அவர்கள் வீட்டிற்கு சென்றேன். திருமணம் எந்த மண்டபத்தில் நடைபெற்றது என்று மறந்துவிட்டேன். என்னுடைய முதல் விசாரைண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் மனுதாரர் மற்றம் அவரது சகோதரர் வெங்கடேசன் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரரும், அவரது சகோதரரும் தனித்தனியாக தொழில் செய்து வருகின்றனர். மனுதாரரின் சகோதரர் கட்டிட ஒப்பந்த வேலை செய்து வருகிறார். அவர அழைத்தால் மனுதாரர் அவருடன் சென்று வேலை பார்ப்பார். அதற்கு என்ன ஊதியம் மனுதாரர் பெற்றார் என்று எனக்குத் தெரியாது.

2) எதிர்மனுதாரரின் தகப்பனார் பெயர் என்கதுத் தெரியாது. அவரிடம் நேரடியாகவும், தொலைப்பேசி மூலமாகவும் பேசியுள்ளேன். எதிர்மனுதாரர் தகப்பனாரிடம் நான் போனிலோ அல்லது நேரிலோ பேசியது கிடையாது என்றாலும், மனுவிற்காக பேசியதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

எதிர்மனுதாரரின் அக்காள் கணவர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. அவர் என்னிடம் பஞ்சாயத்திறகு ஏதேனும் வந்தாரா என்றால் என் வீட்டிற்கே வந்துள்ளார். அவர் குடும்ப பிரச்சனை சம்மந்தமாக என் வீட்டிற்கு வந்துள்ளார். அவ்வாறு வந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்துள்ளார். மனு விவரங்கள் எனக்குத் தெரியும். எதிர்மனுதாரர் மனுதாரர் வீட்டிற்கு வந்து பிரச்சனை மற்றும் தகராறு செய்ததாக கூறுவதில் என்ன செய்தார் என்னால் கூற முடியுமா என்றால் முடியும். பிரச்சனை சம்மந்தமாக நான் மனுதாரர் வீட்டிற்கு சுமார் 3 முறை சென்றுள்ளேன். முதல் விசாரணையில் எதிர்மனுதாரர் தவறான வார்த்தைகளால் பேசியதாக கூறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அது சம்மந்தமாக காவல் நிலையம் மற்றும் நீதிமன்றத்தில் புகார் ஏதும் அளிக்கவில்லை. எதிர்மனுதாரர் எவ்வித பிரச்சனையும் செய்யவில்லை என்றாலும், அவ்வாறு செய்திருந்தால் புகார் அளித்திருப்பேன் என்றாலும், அவர் பிரச்சனை செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு ஒரு பெண் குழந்தை.

3) புதுவை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பின்னர் எதிர்மனுதாரர் சமரசம் செய்து மனுதாரருடன் வாழ்ந்து பின்னர் மீண்டும் பிரச்சனை செய்து திரும்பிவிட்டார். மனுதாரரை மீண்டும், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வைக்க என்னால் முடியுமா என்றால் நான் பல முறை பேசி பார்த்தேன். நான் மனுதாரர் திருமணத்திற்கு சென்றதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. மனுவிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.